சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்

**Case No. OS. 3/2023**

2025ம் ஆண்டு அக்டோபர் மாதம் 30ம் நாள் வியாழக்கிழமை

வாதி தரப்பு சாட்சியாகிய வா.சா.1-இல் வாக்குமூலம் ஆக்ட் 10/1873-ம் ஆண்டின் ஏற்பாட்டின்படி திருமதி.ஆர்.இளவரசி, எழுத்தர் நிலை-2 என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையில், நேரடியான கவனத்திலும், கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கௌரி | தொழில் | தனியார் நிறுவன வேலை |
| கணவர் பெயர் | ராஜேஷ்குமார் | ஜாதி | |
| கிராமம் | விண்ணமங்கலம் | சமயம் | |
| தாலுக்கா | ஆம்பூர் | வயது | 37 |

**30.10.2025 முதல் விசாரணை**

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். என் ஆதார் அட்டை நகல் தாக்கல் செய்கிறேன். ஆதார் அட்டை நகல் அசல் ஆவணத்துடன் சரிபார்க்கப்பட்டது. பிரதிவாதிக்கெதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு பற்றிய முழு விவரம் எனக்குத் தெரியும். என் தரப்பு சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மைதான். என் தரப்பு சான்றாவணங்களாக, 27.03.1985 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 26.02.1998 தேதியிட்ட கிரையப்பத்திரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா சொத்துகளுக்கான 1ம் பிரதிவாதி மற்றும் முனுசாமி பெயரில் உள்ள பட்டா எண்.52க்கான கணினி கூட்டு பட்டா **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா சொத்துகளுக்கான வழிகாட்டி மதிப்பீடு இணையதளத்தில் பதிவிறக்கம் செய்யப்பட்டது **வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆதார் அட்டை நகல் (அசல் ஆவணத்துடன் சரிபார்க்கப்பட்டு) **வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கில் கோரியுள்ளவாறு தீர்ப்பாக வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.